# மரணதண்டனைக்கு எதிரான ஆறாவது உலக காங்கிரஸ் மாநாட்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகிய மங்கள சமரவீர அவர்களினால் ஆற்றப்பட்ட ஆரம்ப உரை

ஆயிரம் ஆண்டுகளாக மரணதண்டனை பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது சமூக ரீதியாக அசௌகரியத்தையும் மனச்சந்தோஷமின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. வரலாற்றில் நியாயமான காலத்திற்கு முன்னரே அநேக விவேகமுள்ள தலைவர்கள் மரணதண்டனை என்பதை மனிதத்தன்மையை இழிவுபடுத்தும் செயல் எனக் கண்டுள்ளனர். உதாரணமாக பண்டைய காலத்திய இலங்கையில் அநேக அரசர்கள் புத்தருடைய போதனைகளினால் கவரப்பட்டுள்ள நிலையில் மரண தண்டனையை ஒழித்துள்ளனர். உண்மையிலேயே முதலாம், மூன்றாம், நான்காம் மற்றும் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் மரணதண்டனையானது இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது ஏறத்தாழ ஓர் நூற்றாண்டுக் காலத்தில் எனது நாட்டின் சட்டவாக்கத்துறையின் தலைமைத்துவங்களுக்கிடையே மரண தண்டனை ஒழிக்கப்படவேண்டுமென்ற ஏகோபித்த உணர்வு நிலவியது என்பதை விளக்குவதற்கு உதவலாம். இந்த ஏகோபித்த உணர்வானது தர்ம அடிப்படை மற்றும் ஓர் ஒழிப்புக்கருவி என்றரீதியில் அதன் விளைவின்மை ஆகிய இரண்டுவிடயங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். 1928 ஆம் ஆண்டளவில் இலங்கை சட்டப்பேரவையில் இலங்கையின் முதலாவது பிரதம அமைச்சரும் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்றாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் தாபகருமாகிய டி.எஸ். சேனநாயக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட மரண தண்டனை ஒழிப்பு பற்றிய தீர்மானத்திற்கு ஆதரவாக 19 உறுப்பினர்களும் அதற்கு எதிராக 7 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். முடிவில் இது அக்காலப்பகுதியில் காலனித்துவ அதிகாரபீடங்களின் அடக்குமுறையினால் தோற்கடிக்கப்பட்டது.

சுதந்திரம் கிடைக்கப்பெற்று சில ஆண்டுகளின் பின்னர் 1956 ஆம் ஆண்டில் நீதி அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராகவிருந்த எனது தந்தையார் எமது நாட்டின் மற்றைய பிரதான அரசியல் கட்சியாகிய இலங்கை சுதந்திரக் கட்சியின் தாபகரும் பிரதம அமைச்சருமாகிய எஸ.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆதரவுடன் மரண தண்டனையை முடிவுறுத்தும் சட்டமூலமொன்றை முன்மொழிவு செய்திருந்தார். இச்சட்டமூலமானது நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஒரு சில ஆண்டுகளின் பின்னர் திரு. பண்டாரநாயக்காவின் படுகொலையின் விளைவாக மரண தண்டனையானது மீளவும் 1976 ஆம் ஆண்டில் நிகழ்நிலை தற்காலிக செயல்நிறுத்தும் நிறுவப்படும் வரை மீளவும் நிறைவேற்றப்பட்டது.

இன்றும் கூட பாராளுமன்றத்தில் உள்ள எனது சகபாடிகளில் பெரும்பான்மையோர் மரண தண்டனை என்பது தர்மரீதியாக வெறுக்கத்தக்கது என்பதையும் அது பயனளிக்காதது என்பதையும் காண்கின்றார்கள் என நான் துணிவுடன் கூறுகின்றேன். எனினும் அவர்கள் தகவல் அளிக்கப்படாத அபிப்பிராயம் பற்றிய தொடை நடுக்க உணர்வு காரணமாக 1956 ஆம் ஆண்டில் அரசாங்கம் எடுத்த துணிகரமான நடவடிக்கையை இன்று எடுத்துக் கொள்வதற்கு விருப்பமற்ற நிலையில் தாங்கள் இருப்பதை நிரூபித்துள்ளனர். இந்த பயம் இலங்கையிலுள்ள சட்டம் வரைபவர்களினதும் யூரர்களினதும் விடயத்தில் மட்டுமன்றி மரணதண்டனையானது இன்னும் ஒழிக்கப் படுவதற்குள்ள நிலையிலுள்ள ஆசிய நாடுகளினதும் விடயத்திலும் உண்மையானதாகும்.

எனவே எம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பொது சவால் என்னிவெனில் எமது அந்தந்த மக்களை செயற்படுவதன் மூலம் முன்னோக்கி வழிநடாத்துவதற்கான கூட்டுத் துணிவைக் கொண்டிருக்குமாறு அவர்களை வற்புறுத்துவதாகும்.

எனினும் மக்களின் அபிப்பிராயத்தை மாற்றுவது நீண்டகாலப் பகுதியை எடுக்கின்றதும் வளவிரிவாக்கத்தைக் கொண்டதுமான ஓர் நடை முறையாகும். அத்துடன் சான்று தொடர்ச்சியான ஆதரவு உரை நடாத்தப்பட்ட போதிலும் மரண தண்டனை என்ற விடயம் பற்றிய மக்களின் அபிப்பிராயம் மாற்றமடையாமல் தேக்க நிலையில் அநேக நாடுகளில் உள்ளது. எனவே இந்த முக்கிய சவாலை வெற்றி கொள்வதற்கு அரசியல் துணிவு வேண்டப்படுகின்றது. போலித் தீர்ப்பு வழங்குவதற்காக அமர்ந்திருக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடும் போது மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு மிகவும் பாரதுாரமான விடயங்களிலும் கூட ஆதரவாக 30 நூற்று வீதத்திற்கு மேற்படாத மக்களே ஆதரவு வழங்குவர். பிரான்சில் மக்களின் அபிப்பிராயமானது 1981ஆம் ஆண்டில் மிகப்பெரிய அளவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சாதகமானதாகவிருந்த போதிலும் அப்போதைய பிரான்சின் சனாதிபதியினால் மரணதண்டனை ஒழிக்கப்படவேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானம் மக்களின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளது. மரணதண்டனையை ஒழிப்பதற்கான நடைமுறையின் பெறுபேறான விவாதமும் மரணதண்டனை ஒழிக்கப்பட்டதன் பின்னர் குற்ற வீதங்களில் மாற்றம் இல்லாமலிருப்பதுவும் மக்களின் பயங்களைக்குறைக்கின்றது. இதன் விளைவாக மரணதண்டனை ஒழிக்கப்பட்டதன் பின்னர் மிகவும் சிறிய எண்ணிக்கையிலேயே குற்றச் செயல்கள் இடம் பெறும்.

தூக்குத் தண்டனை உலகின் மீதிப் பகுதியை விட கூடுதலான அளவில் இடம் பெறுகின்ற ஆசியாவில் வேகமானது மெதுவாக கட்டி எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தென்கிழக்காசியாவில் தூக்குத் தண்டனைகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் தெற்காசியாவில் குறுகிய மற்றும் நீண்ட நிகழ்நிலை தற்காலிகச் செயல் நிறுத்தம் இடம்பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டில் இருபத்தி நான்கு ஆசிய நாடுகள் மரண தண்டனையின் தற்காலிகச் செயல் நிறுத்தம் மீதான ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததுடன் 2014ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 18 ஆகக் குறைந்துள்ளது. மேலும் நல்ல செய்திகள் உள்ளன. இந்த மாநாட்டில் உரை நிகழ்த்தவுள்ள இலங்கை நிதி அமைச்சரும் கூட இலங்கையானது 2007ஆம் 2008ஆம் 2010ஆம் ஆண்டுகளில் இத்தீர்மானம் மீது சாதகமான முறையில் வாக்களிப்புச் செய்த அதே பாரம்பரிய நிலைக்கு திரும்பி அத்தீர்மானத்திற்கு சாதகமான முறையில் வாக்களிக்கும் எனவும் இதை விட முக்கியமாக நான்கு தசாப்த காலமாக கடைப்பிடிக்கப்படும் நீண்ட நிகழ்நிலை தற்காலிகச் செயல் நிறுத்தத்தையும் தொடங்குமெனவும் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மரண தண்டனையை ஒழித்தல் என்பது வலியுறுத்தலை வேண்டுகின்றதுடன் மற்றும் தீர்மானம் எடுப்பதையும் வேண்டுகின்றது என்பதுடன் எல்லாவற்றுக்கும் மேலாக அது தலைமைத்துவத்தை வேண்டுகிறது என்பதையும் அதாவது சட்டம் இயற்றுபவர்கள், செயற்பாட்டாளர்கள், பதிப்பாசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் யூரர்கள் ஆகியோர்களின் தலைமைத்துவத்தை வேண்டுகின்றது என்பதையும் குறிப்பிட்டு எனது உரையை முடிவுறுத்துவதற்கு எனக்கு அனுமதி வழங்குங்கள். நெருக்கடியான திரட்டலுக்கு வேகம்

உருவாகிக் கொண்டிருக்கம் நிலையில் வரும் ஆண்டுகள் மரண தண்டனை என்பது பிராந்தியத்தில் மரணித்து விடும் என்பதில் நான் நம்பிக்கை உடையவனாகவிருக்கிறேன்.